As the result is a product, it is interesting to observe that the result is unaffected by interchange in the order of given planets:— (e.g.) Surya Bhukti, Kethu Dasa, Rahu Andhra; or Rahu Dasa, Surya Andhra, Kethu Bhukti have the same period.

Ramamandiram
97, Sakanayakan Street
TANJORE

NEETI ŚATAKAM

OF

BHARTṚHARI

Translated into Tamil
verse
by

SRI O. N. APPASAMI AYYER

Published by:
O. A. NARAYANASWAMI, B. A., B. L.,
Honorary Secretary,
For the Administrative Committee of
The Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library,
Thanjavur.

A. D. 1964 Śaka 1886

Price: 50 P.

முகவுரை

பர்த்ருஹரி நீதி சதகத்திற்கு என் மதிப்பிற்குரிய காலஞ்சென்ற ஸ்ரீ **O. N.** அப்பாஸ்வாமி அய்யரவர்கள் நல்ல தமிழ் பாக்கள் செய்துள்ளார். அய்யர் அவர்களின் குமாரரும் என் அன்பிற்குரிய நண்பருமான ஸ்ரீ **O. A.** நாராயண ஸ்வாமி அய்யரவர்கள் அந்த ஏடுகளை அனுப்பினர். அவைகளைப் பார்த்ததும் அந்த எளிய நடையையும் மூலசுலோகங்களின் உட்கருத்தை ஆடிபோல் காட்டி அதே மாதிரி சீர்குன்றாமல் பருந்து நிழலும் போல செய்யுள்களில் ஆக்கியிருப் பதையும் நான் படித்துக்களித்தவாறு மற்றவர்களும் அனுபவிக்க வேண்டுமென்ற கருத்து ஏற்பட்டது. என் வேண்டுகோளுக்கிணங்கி ஸ்ரீ நாராயணஸ்வாமி அய்யர் அவர்களும் இச்செய்யுள்களை அச்சிட்டுப் பிரசுரிக்க இணங்கினர். ஸ்ரீ ஸரஸ்வதி மஹால் நூலகத்தின் வெளியீட்டில் இந்த செய்யுள்களை அச்சிட ஒப்புக்கொண்ட தற்கு நமது நன்றி என்றும் உரித்து.

ஸ்ரீ அப்பாஸ்வாமி அய்யரவர்கள் உயர்ந்த ஆசிரியர்களில் ஒருவர். பல மொழிகளிலும் அதாவது இந்தியமொழிகள் மட்டும் அல்ல, மற்றும் பிராஞ்சு, ஜெர்மன் முதலிய மேல்நாட்டு பாஷைகளிலும் வல்லுநர். அவருடைய மேன்மை யான குணங்களும் மேதையும் படிப்பும் எல்லோரும் கவர்ச்சிசெய்யும் தன்மையது. உயரிய நோக்கங்களைத் தன் வாழ்க்கையிலும் காட்டி மாணவர்களுக்கும் புகட்டினர். அவர் ஞாபகார்த்தமாக இந்த நூலை வெளியிட வேண்டுமென்பது என்போன்றவர் அவா.

ஸ்ரீ அய்யரவர்களின் மேதையையும் பர்த்ருஹரியின் மிக உயரிய கருத்துக் களமையப்பெற்ற சுலோகங்களையும்பற்றி விமர்சனை செய்து முகவுரை எழுத எனக்கு யோக்கியதையும் திறமையும் போதாது என்று உணர்ந்தும் அய்யரவர்கள் பேரில் எனக்குள்ள பக்தியையும் வடமொழி தென்மொழி இவை இரண்டிலும் எனக்குள்ள பற்றுதலுமே இந்தப் பணியை ஏற்றுக்கொண்டதற்குக் காரணங்கள்.

ஸ்ரீ பர்த்ருஹரி எந்த காலத்தியவர், எப்படியிருந்தார் என்ன என்ன நூல்கள் செய்தார் என்பதெல்லாம் நமக்குத் தெரியவில்லை. பெரிய கவிகளின் சரித்திரங்கள் எப்படி நமக்கு ஐயமின்றித் தெரியவில்லையோ அப்படியே ஸ்ரீ பர்த்ருஹரியின் சரித்திரமும்.

கர்ணபரம்பரையாக அவர் ஒரு அரசன் என்றும் மாளவ தேசத்தை ஆண்டனர் என்றும் விக்கிரம சகாப்தத்தைத் துவக்கிய விக்கிரமாதித்ய மன்னரின் உடன்பிறந்தவரென்றும் ஏதோ தன் மனைவியான ராணியின் நடத்தைப்பிசகினால் வாழ்க்கையை வெறுத்து அரசைத் துறந்து துறவியானர் என்றும் சொல்லப் படுகிறது.

'**यां चिंतयामि सततम्** ...'' என்றுள்ள செய்யுளைக் கொண்டும், மற்ற இரண்டு சதகங்களான சிருங்காரசதகம், வைராக்ய சதகம் இவைகளைக் கொண்டும் உலகஇன்பத்தில் திளைத்து வெறுப்புற்று சந்யாசம் கொண்டவர் என்றும், நீதி

சதகத்தைக் கொண்டு அரசு புரிந்தவரென்றும் ஊகிக்கின்றனரே தவிர்த்து உண்மையில் இந்த கர்ணபரம்பரைக்கதைக்கு ஆதாரமிருப்பதாகத் தெரியவில்லை.

நீதி சதகத்தில் 63-வது சுலோகம் "भवन्ति नम्रास्तरवः (பரோபகார பத்ததியில் "பழச்சுமை மிகுந்திடில்" என்ற தலைப்புள்ள செய்யுள்) காளிதாசனின் சாகுந்தலத்திலுள்ளது போன்றிருப்பதால் யார் யாரைப் பின்பற்றினர் என்று தர்க்கிக்க இடம் கொடுக்கிறது.

257 வது செய்யுளில் शकयुवति என்று வருவதால் யவனர் சகர் இவர்கள் தொடர்பு ஏற்பட்ட பிறகு பிறந்தவராயிருக்க வேண்டும்.

சில செய்யுட்கள் பஞ்சதந்திர செய்யுட்களை ஒட்டியிருப்பதால் அதன் பிறகு இந்த சதகங்கள் தொகுக்கப்பட்டனவோ என்று சந்தேகிக்கலாம்.

வாக்யபதீய கர்த்தாவும் சதக கர்த்தாவும் ஒருவரேயா, வேறு என்ற பிரச்னையும் எழுகிறது.

விசாகதத்தன் எழுதியதாக சொல்லப்படும் தேவி சந்திர குப்தம் என்ற காவ்யம் கிடைத்தால் பர்த்ருஹரியின் வரலாறு காணலாம் என்று தோன்றுகிறது.

ஆராய்ச்சி நிபுணரான ஸ்ரீ D. D. கோஸம்பியவர்கள் பர்த்ருஹரிசதகங்களைப் பரிசீலனை செய்து 12 வருஷங்களுக்குமுன் அவைகளைப்பதிப்பித்திருக்கின்றனர். அதன் பிறகு அவ்வளவு விமர்சனம் செய்து ஆராய்ச்சி எவரும் செய்ததாகத் தெரியவில்லை.

வாவிள்ள ராமஸ்வாமி சாஸ்திரிகள் பிரசுரம் செய்த பதிப்பில் பர்த்ருஹரி சரித்திரத்தைப்பற்றி பச்சையப்பர் கல்லூரி ஸம்ஸ்கிருதபண்டிதர் ஸ்ரீ நாராயண சாஸ்திரிகள் எழுதியிருக்கின்றனர்.

பர்த்ருஹரியின் காலத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டியது நம் தேசத்துப் படிப்பாளிகளின் கடமை.

இந்தத் தமிழ் செய்யுள்களில் ஏதாவது பிழை இருப்பின் இது எங்கள் அறிவின்மையினால் ஏற்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால் பழைய ஏட்டில் அய்யரவர்கள் எழுதியிருந்ததைப் பழுதுபோன இடங்களில் எங்கள் புத்திக்கு எட்டிய மட்டும் திருத்தியிருக்கிறோம். அந்தந்த செய்யுளுக்கு நேராக வடமொழி சுலோகத்தையும் ஆச்சிட்டிருக்கிறது. பெரியோர்களுக்கும் மாணவர்களுக்கும் இது உதவியாக இருக்குமென்று எதிர்பார்க்கிறோம்.

என்னை இந்த நூலுக்கு முகவுரை எழுதும்படி பணித்த என் நண்பர் O. A. நாராயணஸ்வாமி அவர்களுக்கும் இந்த நூலை என்னுடன் பரிசீலித்து பிழை திருத்தி உதவிய ஆசிரியர் மகாலிங்கம் அவர்களுக்கும் என் ஆழ்ந்த நன்றி.

தஞ்சை

தி. வி. சடகோபன்.

பர்த்ருஹரி நீதி சதகம்.

॥ भर्तृहरिनीतिशतकम् ॥

தனிப் பெரும் கடவுள் வணக்கம்.

1 அறிவும் மகிழ்ச்சியும் உருவமாய் அமைந்து
திசையாற் பொழுதால் தீர்வு பெறலில்லாச்
சுயவனு பவமே சிறந்த அளவையாம்
சாந்தமாம் ஒளியைச் சிறப்புற வணங்குவாம்.

दिक्कालाद्यनवच्छिन्नानन्दचिन्मात्रमूर्तये ।
स्वानुभूत्येकमानाय नमः शान्ताय तेजसे ॥ १ ॥

முதற்பத்து

மூர்க்க பத்ததி.

2 அழுக்கறுத் துகவார் அறிவு நிறைந்தவர்
விழுப்பமார் விரகர் நகுதலோ டிகழ்வர்
கற்றறி யாதவர் கருத்துணர்ந் தாய்வரோ
உற்றநம் உணர்மொழி உடலினுட் புதைந்தது.

बोद्धारो मत्सरग्रस्ताः प्रभवः स्मयदूषिताः ।
अबोधोपहताश्चान्ये जीर्णमङ्गे सुभाषितम् ॥ २ ॥

3 அறிவில் லாதவர் எளிதினில் மகிழ்வர்;
அறிவிற் சிறந்தவர் அதனி னின்புறுவர்;
நன்றுணர்ந் தகங்கொளா நயனில் கலைஞரை
பொன்புரை கலைமகள் கொழுநனும் பூரியான்.

अज्ञः सुखमाराध्यः सुखतरमाराध्यते विशेषज्ञः ।
ज्ञानलवदुर्विदग्धं ब्रह्मापि नरं न रञ्जयति ॥ ३ ॥

4 சுருப்பல் வரிசையிற் கவரலாம் முத்தம்;
இராப்பகல் கதறும் இமிழ்கடற் றிரைமேல்
உராய்நடந் தேகிக் கடக்கலாங் கடலை;

அஞ்சுற் றெனத்தலை புனையலாம் சினவரா;
பிடித்ததே பிடியாய்ப் புகல்செயும் மூர்க்கரை
இடித்துக் காட்டிமெய் புணர்த்துதல் எளிதில்.

प्रसह्य मणिमुद्धरेन्मकरवक्त्रदंष्ट्रान्तरा-
त्समुद्रमपि संतरेत्प्रचलदूर्मिमालाकुलम् ।
भुजङ्गमपि कोपितं शिरसि पुष्पवद्धारये-
न्न तु प्रतिनिविष्टमूर्खजनचित्तमाराधयेत् ॥ ४ ॥

5 மணலைப் பிசைந்துநெய் யெடுக்கவும் முயலலாம்;
அனலென உடற்றும் அருநீர் வேட்கையைக்
கானல்நீர்க் காட்சியால் தணித்தலு மாகும்;
ஆனமட் டொருவன் அலைந்து திரிந்துபின்
கானுறு முயற்கொம் படையினு மடையலாம்;
தான்பிடித் ததுபிடி யென்பவர் துரிசற
நாமெடுத் தோதல் நவிலவும் படுமோ?

लभेत सिकतासु तैलमपि यत्नतः पीडयन्
पिबेच्च मृगतृष्णिकासु सलिलं पिपासार्दितः ।
कदाचिदपि पर्यटन् शशविषाणमासादये-
न्न तु प्रतिनिविष्टमूर्खजनचित्तमाराधयेत् ॥ ५ ॥

6 அமுதெனப் பாயும் அரியவின் மொழிகளால்
அறிவிலா னொருவன் அகம்சீர் திருத்திடல்
தாமரைத் தண்டின் துன்னு நன்னூலால்
தாம்புலி தன்னைத் தளைத்தலே யாகும்;
அனிச்சப் பூவின் அரியமெல் லருகால்
மணிச்செதுக் கமைத்தல் மற்றுவே றென்சொல்?
ஒருதுளித் தேனால் ஓதமார் உவரியை
உறுசுவைத் தாக்குதற் குவமை யாக்கிடுமே.

व्यालं बालमृणालतन्तुभिरसौ रोद्धुं समुज्जृम्भते
भेत्तुं वज्रमणिं शिरीषकुसुमप्रान्तेन सन्नह्यति ।
माधुर्यं मधुबिन्दुना रचयितुं क्षारांबुधेरीहते
मूर्खान्यः प्रतिनेतुमिच्छति बलात्सूक्तैः सुधास्यन्दिभिः ॥ ६ ॥

7 அறிவிலார் தமக்கே யழகிய போர்வையாம்
விதியினு லமைந்ததாம் விரகுறு மௌனம்;
சான்றோர் குழுவிற் சார்ந்திடும் போதில்
ஆன்ற வோரணியா மறிவிலார்க் கமைவே.

स्वायत्तमेकान्तहितं विधात्रा विनिर्मितं छादनमज्ञतायाः ।
विशेषतः सर्वविदां समाजे विभूषणं मौनमपण्डितानाम् ॥ ७ ॥

8 சிற்றறி வினனுய்ச் சிதறுறும் சமயம்
உற்ற மதத்தால் உணர்ந்தமென் றுகந்தேன்;
நற்றிற வறிஞர்பால் நவின்றபின் சிற்சில
கற்றில னெனக்கண் டற்றது மதஜுரம்.

यदा किञ्चिज्ज्ञोऽहं गज इव मदान्धः समभवं
तदा सर्वज्ञोऽस्मीत्यभवदवलिप्तं मम मनः ।
यदा किंचित्किंचिद्बुधजनसकाशादवगतं
तदा मूर्खोऽस्मीति ज्वर इव मदो मे व्यपगतः ॥ ८ ॥

9 இழிஞ ரிழிய பொருள்தனை வௌவுவர்
இழிவுள உயிர்ப்பொறை யறிகிலர் ஈனம்.
கழிமுடை நாற்றத் தழுக்குறும் எலும்பை
பழிப்புறும் தெருநாய் பாய்ந்துணும் போழ்தில்
விழுப்பமார் இந்திரன் விரும்பி யணுகினும்
கெழுதகை யிலதாய்க் கேடுறும் பாவம்.

क्रिमिकुलचितं लालाक्लिन्नं विगन्धि जुगुप्सितं
निरुपमरसप्रीत्या खादन्खरास्थि निरामिषम् ।
सुरपतिमपि श्वा पार्श्वस्थं विलोक्य न शङ्कते
नहि गणयति क्षुद्रो जन्तुः परिग्रहफल्गुताम् ॥ ९ ॥

10 வானினின் றிழிந்துறும் வரநதி கங்கை
தான்வந் தடைந்தது தகைமைசால் சிவன்றலை;
பசுபதி முடியினின் றகன்றுபர் வதமுற
உயர்மலை முடியினின் றிறங்கியூர்ந் ததுதரை
தரையினின் றோடி யணைந்தது கடலை

வரைவொன் றின்றிப் பலநெறிச் சென்று
உரைசால் கங்கையு முயர்வை யிழந்தது.
பகுத்தறி வின்றிப் புன்னெறிப் பட்டு
தகுந்ததம் பதவியிற் றழ்ந்தவர் பலரே,

शिरश्शार्वं स्वर्गात्पशुपतिशिरस्तः क्षितिधरं
महीध्रादुत्तुङ्गादवनिमवनेश्चापि जलधिम् ।
अधो गङ्गा सेयं पदमुपगता स्तोकमथवा
विवेकभ्रष्टानां भवति विनिपातः शतमुखः ॥ १० ॥

11 ஒவ்வொரு நோய்க்கும் மருந்துள துலகில்;
செவ்விதாம் அறிவிலார் சிறக்க ஏதுளதோ?
நெருப்பை அணைக்கலாம் நீரி னுதவியால்;
எறிக்கும் வெயிலைத் தணிக்கலாம் குடையால்;
தெறிக்குந் தோட்டியால் தூண்டலாம் யானையை;
காளை கழுதையைக் கழித்தலாம் கழியால்;
ஆளைத் தெறுநோ யகற்றலாம் மருந்தால்;
மந்திர தந்திரத்தால் மாற்றலாம் நஞ்சை
தந்திர மொன்றிலைத் தணிக்க மடமையை.

शक्यो वारयितुं जलेन हुतभुक्छत्रेण सूर्यातपो
नागेन्द्रो निशिताङ्कुशेन समदो दण्डेन गोगर्दभः ।
व्याधिर्भेषजसंग्रहैश्च विविधैर्मन्त्रैः प्रयोगैर्विषं
सर्वस्यौषधमस्ति शास्त्रविहितं मूर्खस्य नास्त्यौषधम् ॥ ११ ॥

இரண்டாம் பத்து.

வித்வத் பத்ததி

12 நூல்பல உணர்ந்து நுவல்வல அறிஞர்
நேர்படும் இன்சொலால் நிகழ்த்துவர் தெளிவு
அத்தகை யறிஞர் மிடியினும் அரசரே;
வித்தக வன்மையின் விளங்குவர் மதியால்;
நேர்படா வரசால் நிபுணர் வறிஞராம்
இரத்தினச் சோதகன் இனமில னயின்
சிறப்புள ஒளிக்கலும் சீர்பெற லிலையே.
சிறப்பிலா திருப்பினும் சிறக்குநா ளுறுமே,

शास्त्रोपस्कृतशब्दसुन्दरगिरः शिष्यप्रदेयागमाः
विख्याताः कवयो वसन्ति विषये यस्य प्रभोर्निर्धनाः ।
तज्जाड्यं वसुधाधिपस्य सुधियस्त्वर्थं विनापीश्वराः
कुत्स्याः स्युः कुपरीक्षकैर्न मणयो यैरर्घतः पातिताः ॥ १२ ॥

13 கல்வியென் றோதும் கரந்த உட்பொருள்
கள்வன் றனக்குக் கையுற லிலேயே;
எப்போதும் அது அளித்திடும் தென்பை;
எப்போதும் அதால் இயம்பொரு வின்புறும்
அற்போ டோதுவோர்க் களித்தாற் பெருகிடும்
கற்ப முடிவிலும் குறைவுறல் இலேயே.
இத்தகை யோரை யிறைவரே போற்றுமின்
வித்தக வறிஞரை விரக ரிகழ்வரோ ?
அவர்தம் மிடத்தில் அழுக்கா றெவர்க்குறும்
எவர்க்கு மவரிட மன்பே வளர்க.

हर्तुर्याति न गोचरं किमपि शं पुष्णाति यत्सर्वदा
ह्यर्थिभ्यः प्रतिपाद्यमानमनिशं प्राप्नोति वृद्धिं पराम् ।
कल्पान्तेष्वपि न प्रयाति निधनं विद्याख्यमन्तर्धनं
येषां तान्प्रति मानमुज्झत नृपाः कस्तैस्सह स्पर्धते ॥ १३ ॥

14 உயர்வுள வுண்மைகள் உற்றுணர் புலவரை
உயர்வுற் றிணங்குறும் ஆடென மதியேல்;
புல்லினிற் புல்லிதாய்க் கருதும் பொருளால்
புல்லிப் பிணைத்திடல் பலித்திடும் செயலல;
புதுமதப் பொழிவால் கவுளலைப் புறங்கயம்
சிதைமரை நாளநூற் சிடுக்கினிற் றளையா.

परिगतपरमार्थान् पण्डितान् मावमंस्था-
स्तृणमिति लघु लक्ष्मीर्नैव तान् संरुणद्धि ।
अभिनवमदरेखाश्यामगण्डस्थलानां
न भवति बिसतन्तुर्वारणं वारणानाम् ॥ १४ ॥

15 பால்நீர்க் கலப்பிற் பால்பிரித் திடுந்திறம்
பால்நிற அன்னப் புள்விட் டகலுமோ ?

அனத்தா னைத்துடன் ஆரச் சினக்கினும்
அனத்தான் பொய்கையை வற்றிடச் செயலால்
வனச மலர்த்திரள் விளையாட் டயர்வுறும்;
இதற்குமே லிடரும் பிரமனு லியலுமோ?
எதற்கும் மேலோர் செறினு மிளையவர்
தமக்குறு திறமையிற் பின்வாங் குவரோ?

अम्भोजिनीवनविहारविलासमेव
हंसस्य हन्ति नितरां कुपितो विधाता।
नत्वस्य दुग्धजलभेदविधौ प्रसिद्धां
वैदग्ध्यकीर्तिमपहर्तुमसौ समर्थः ॥ १५ ॥

16 ஆண்மகன் றனக்கு அழகைத் தருவன
தோள்வளை மதியொளித் தொங்க லலவே
குளிப்பு முழுக்கல கும்மெனும் பூச்சல;
அளிப்பன சிறப்பை அழகிய மலரல
கல்விசேர் சொற்றிறம் ஒன்றே கவினணி
பல்வகைப் பிறவணி பழுதுறு மலவோ?

केयूराणि न भूषयन्ति पुरुषं हारा न चन्द्रोज्ज्वलाः
न स्नानं न विलेपनं न कुसुमं नालंकृता मूर्धजाः।
वाण्येका समलंकरोति पुरुषं या संस्कृता धार्यते
क्षीयन्तेऽखिलभूषणानि सततं वाग्भूषणं भूषणम् ॥ १६ ॥

17 கற்றோ னுக்கே கல்வியா லழகுறும்
கற்ற தாங்கல்வி காத்துள மறைபொருள்
கற்ற தனுலே கதித்திடு மின்பிசை;
உற்ற வாசாற்கு முயர்ந்ததோ ரொளியே;
மற்றோர் நாட்டிலு முற்றதோ ருறவாம்;
பற்றுறுந் தெய்வம் பலவினும் சிறந்ததே;
வெற்றிவேல் மன்னரும் பற்றொடு வணங்குவர்
நற்றுங் கல்வி நண்ணு தாற்கு
உற்ற வுயர்தனம் உறுவது மிலேயே;
இத்திறத் தாலே கற்றிலா ராடே.

विद्या नाम नरस्य रूपमधिकं प्रच्छन्नगुप्तं धनं
विद्या भोगकरी यशस्सुखकरी विद्या गुरूणां गुरुः ।
विद्या बन्धुजनो विदेशगमने विद्या परा देवता
विद्या राजसु पूज्यते नहि धनं विद्याविहीनः पशुः ॥ १७ ॥

18 பொறுமை யிருந்தால் போர்க்கவ சம் ஏன்?
தெறுஞ்சினம் இருந்தால் தெவ்வர் எதற்கோ?
பங்காளி யனைய புல்லோர் இருந்தால்
வெங்கன லென்னும் வெம்பகை யெதற்கு?
நண்பரி ருந்தால் நன்மருந் தெதற்கு?
பண்பில ருண்டெனில் பாம்புவே றெதற்கு?
புரையிலாக் கல்வி பொருந்தி யவற்கு
நிறைபொருட் செல்வம் நீங்கிலென் குறையே.

क्षान्तिश्चेत्कवचेन किं किमरिभिः क्रोधोऽस्ति चेद्देहिनां
ज्ञातिश्चेदनलेन किं यदि सुहृद्दिव्यौषधैः किं फलम् ।
किं सर्पैर्यदि दुर्जनाः किमु धनैर्विद्याऽनवद्या यदि
व्रीडा चेत्किमु भूषणैस्सुकविता यद्यस्ति राज्येन किम् ॥

19 ஒன்பது வகைத்தாம் உலகிய லோர்வு
அன்புடன் நடத்தல் உற்றார் உறவை
பணிவிடை யாளர்பால் பரவிய கிருபை
பணிபோற் பகையிடம் பதுங்கி வஞ்சித்தல்
நல்லோ ரிடத்தில் நயமார் அன்பு
வல்லர சிடத்தில் வணங்கு விசுவாசம்
கற்றசான் றோர்பால் கரவிலாத் தன்மை
உற்றப கைவர்பால் உளந்தள ராமை
முதியோர் தம்மிடம் முற்றிய பொறுமை
நிதிபோல் மனைபால் நிகரிலா மதிப்பே.

दाक्षिण्यं स्वजने दया परिजने शाठ्यं सदा दुर्जने
प्रीतिः साधुजने नयो नृपजने विद्वज्जने चार्जवम् ।
शौर्यं शत्रुजने क्षमा गुरुजने कान्ताजने धृष्टता
ये चैवं पुरुषाः कलासु कुशलास्तेष्वेव लोकस्थितिः ॥

20 நல்லோர் பழக்கம் நல்காப் பயனெது?
ஒல்லும் வகையால் ஒழித்திடும் மதிநோய்
பேசும் மொழிகளில் புகுத்திடும் மெய்ம்மை
நேசமார் மதிப்பைத் தந்திடும் நன்கு
பகுத்தறி வதனைப் பல்கிடச் செய்யும்
வகுக்கும் திசையெலாம் வழங்கிடும் நல்லிசை.

जाड्यं धियो हरति सिञ्चति वाचि सत्यं
मानोन्नतिं दिशति पापमपाकरोति ।
चेतः प्रसादयति दिक्षु तनोति कीर्तिं
सत्सङ्गतिः कथय किं न करोति पुंसाम् ॥ २० ॥

21 பொருட்சுவைச் சித்தராம் புலவோர் தமக்கு
அருட்டிற வெற்றி யமைந்திட என்றும்
நல்லிசை யுருவாய் நிலவுந்தவர் உடற்கு
இல்லையே மூப்புச் சாக்காட் டச்சம்.

जयन्ति ते सुकृतिनो रससिद्धाः कवीश्वराः ।
नास्ति तेषां यशःकाये जरामरणजं भयम् ॥ २१ ॥

மூன்றும் பத்து

மான சௌர்ய பத்ததி

22 மதங்கொள் யானையின் மண்டையை யுடைத்து
அதஞ் செய் ததனின் செந்நீர் சதையிவை
உண்பதே நோக்கமாய் உறுதிகொள் வயமா
நண்ணும் ஊக்கம் முழுதும் நலிந்தும்
உண்ணு தினைத்தும் மூப்பால் ஒடுங்கியும்
விண்ணுறு வரைநாள் கிட்டினு மஃது
புல்லுண்டு வாழும் புன்மை யுருது
வல்லாண் மையாக வயத்துடன் வியும்.

क्षुत्क्षामोऽपि जराकृशोऽपि शिथिलप्रायोऽपि कष्टां दशा-
मापन्नोऽपि विपन्नदीधितिरपि प्राणेषु नश्यत्स्वपि ।
मत्तेभेन्द्रविभिन्नकुम्भपिशितग्रासैकबद्धस्पृहः
किं जीर्णं तृणमत्ति मानमहतामग्रेसरः केसरी ॥ २२ ॥

23 உணவிடு வோனை எதிர்நோக் கிடிலோ
தனதுடல் தரைபட மல்லாந் திடும்நாய்
வயிற்றையும் முகத்தையும் வயங்கக் காட்டி
கயற்றிய வாலை யாட்டிடுங் கரைந்து
கால்கள் தரையில் மோதுறக் குதித்து
சால்புள நன்றியைச் சிறக்கக் காட்டும்;
யானையிற் சிறந்ததோ எஜமானனைப்போல்
தான்தன் போஷகன் தன்னைக் கண்ணுறும்
செல்வ மாகப் பலமுறை சொன்னபின்
மெல்ல மெல்ல மடுக்கும் கவளம்.

लांगूलचालनमधश्चरणावघातं
भूमौ निपत्य वदनोदरदर्शनञ्च ।
श्वा पिंडदस्य कुरुते गजपुङ्गवस्तु
धीरं विलोकयति चाटुशतैश्च भुंक्ते ॥ २३ ॥

24 பிறப்பிறப் பமைந்த பீழையாம் சுழலில்
இறந்தவன் யாரே பிறவா திருப்பவன்?
எவனது பிறப்பால் குடிமே லுறுமோ
அவனே பிறப்பவன், மற்றவர் பிறப்பெவன்?

परिवर्तिनि संसारे मृतः को वा न जायते ।
स जातो येन जातेन याति वंशस्समुन्नतिम् ॥ २४ ॥

25 நசையால் மெலிந்த பரதையாம் தெருநாய்
வசையுறும் அழுக்கும் கொழுப்புஞ் செறிந்த
தசையிலா எலும்பையும் தாவிக் கடிக்கும்;
பசிதணி உணவுப் பற்றின் றேனும்
நசையால் மென்றிடும் நரம்படர் எலும்பை;
ஒள்ளிதாம் சிங்கம் ஓறும் பசியுற்றும்
குள்ளை நரியது கைக்குற் றதேனும்
பிள்ளா ததனைப் பிடித்திடும் கயமே;
பசிநோய் வருத்தினும் பசியுறும் பிராணிகள்
உசிதமாம் தந்தமக் குரியதே நாடும்.

स्वल्पस्नायुवसावसेकमलिनं निर्मांसमप्यस्थि गोः
श्वा लब्ध्वा परितोषमेति न च तत्तस्य क्षुधाशान्तये ।
सिंहो जम्बुकमङ्कमागतमपि त्यक्त्वा निहन्ति द्विपं
सर्वः कृच्छ्रगतोपि वाञ्छति जनस्सत्वानुरूपं फलम् ॥

26 பூங்கொத் தவைபோற் பூதலந் தன்னுள்
ஓங்கிய நிலையுள விரண்டே வறிஞர்க்கு
நல்லோர் தலைமிசை நிலைபெறச் சிறத்தலும்
கல்லார் கானற் கன்றி வீழ்தலுமே.

कुसुमस्तबकस्येव द्वयी वृत्तिर्मनस्विनः ।
मूर्ध्नि वा सर्वलोकस्य शीर्यते वन एव वा ॥ २६ ॥

27 பகலிராத் துலக்கும் பகலவன் மதியை
இகலுள ராகுவாம் இறுந்தலை விழுங்குவன்
பருவநா ளிரண்டிலும் பண்ணுவன் புசிப்பு
உருவமார் வியாழ னுதியாங் கோளொருவும்
விரியம் விரும்பு விறலோ னிராகு
சீரிய சிந்தையிற் பகையா னிவற்றை.

सन्त्यन्येपि बृहस्पतिप्रभृतयस्संभाविताः पञ्चषा-
स्तान्प्रत्येष विशेषविक्रमरुची राहुर्न वैरायते ।
द्वावेव ग्रसते दिवाकरनिशाप्राणेश्वरौ भास्वरौ
भ्रातः पर्वणि पश्य दानवपतिश्शीर्षावशेषाकृतिः ॥ २७ ॥

28 ஆதி சேட னுமை வராகம்;
பாது காக்குமிறை பகவன் அம்சமாம்;
அகன்ற பணுமுடி அகிலம் சுமந்தது
புகன்ற வவ்வரவைப் புறம்பெற் றதாமை;
தகவுள் விவற்றைச் சுமந்தது வராகம்
வைத்த பாரந் தாங்கிய வயவரை
எய்த்த விவ்வுலகில் ஏற்றுவர் பலரும்;
வீரர்கள் செயல்கள் வியந்தக் கனவே.

वहति भुवनश्रेणिं शेषः फणाफलकस्थितां
कमठपतिना मध्येपृष्ठं सदा स च धार्यते ।

तमपि कुरुते क्रीडाधीनं पयोधिरनादरा-
दहह महतां निस्सीमानश्चरित्रविभूतयः ॥ २८ ॥

29 இந்திரன் குலிசம் தந்தையை எரிக்கையில்
வந்துறு துயரால் பனிவரை வருந்துறத்
தன்னுயிர் தக்கக் கடலொளி மைநகம்
மன்னுங் கடலில் மாய்ந்ததேல் மானமாம்
மான சௌரியம் மன்னுமோர் மன்மகன்
தானவர்க் குதவுறு துயிர்பெறல் தகவோ?

वरं प्राणोच्छेदः समदमघवन्मुक्तकुलिश-
प्रहारैरुद्गच्छद्बहुलदहनोद्गारगुरुभिः ।
तुषाराद्रेः सूनोरहह पितरि क्लेशविवशे
नचासौ सम्पातः पयसि पयसां पत्युरुचितः ॥ २९ ॥

30 சூரியகாந்த மென்னுஞ் சிலைப்பொருள்
வீரியன் வெயிலவன் கதிருறிற் கதழ்ந்திடும்;
ஊக்கமும் மானமும் உற்றவோ ராண்மகன்
தூக்குறல் தகுமோ பிறர்செயும் பழிப்பை.

यदचेतनोऽपि पादैः स्पृष्टः प्रज्वलति सवितुरिनकान्तः ।
तत्तेजस्वी पुरुषः परकृतनिकृतिं कथं सहते ॥ ३० ॥

31 இளஞ்சிங் கமாயினு மிபந்தனைக் கண்ணுறில்
மதம்வடி மண்டையிற் பாய்ந்தடித் தொறுக்கும்;
சவுரிய முடையார் செய்வர் துணிசெயல்
கவுரவ மதுவே கரந்தொடுங் குவதல்
ஆண்டுக் குறைவினால் ஆண்மை குறையுமோ?
பூண்டிடும் பெருஞ்செயல் பிறப்புறு மிடலே.

सिंहः शिशुरपि निपतति मदमलिनकपोलभित्तिषु गजेषु ।
प्रकृतिरियं सत्ववतां न खलु वयस्तेजसां हेतुः ॥ ३१ ॥

நான்காம் பத்து

அர்த்த பத்ததி.

32 பணமொன் றின்றேல் புல்லாம் எல்லாம்
கனமாம் குடிமை நரகுற விடுவர்;
நற்குணம் பலவும் நீடுமே அதன்கீழ்;
நன்னெறி யதுவே நெடுந்தன் றிழிவுறு ர்;
நற்குடி யோமெனும் நலஞ்செய் மானம்
ஏற்குறு பஞ்சென எரியுற் றிடுமே
முரண்சேர் வலிமை முழங்கிடிக் கிரையுறும்
அருணும் பலவும் அகன்றிட நேரினும்
பணமாம் ஒன்றையே பரவுவர் கயவர்.

जातिर्यातु रसातलं गुणगणस्तत्राप्यधो गच्छतात्
शीलं शैलतटात्पतत्वभिजनस्संदह्यतां वह्निना ।
शौर्ये वैरिणि वज्रमाशु निपतत्वर्थोऽस्तु नः केवलं
येनैकेन विना गुणास्तृणलवप्रायास्समस्ता इमे ॥

33 பொன்னுடை யானே பெருங்குடிப் புகல் பெறும்
மன்னிய செல்வம் மிகுந்திடில் மாண்குடி
உன்னுங் கல்விமான் உயர்நிதி யுடையோன்;
பன்னும் மறைவலான் பணம்நிறைந் தவனே;
நல்லியல் பறியும் நுட்பமும் அவனதே
ஒல்லும் வகையா லோதுவோ னவனே.
பார்வைக் கழகன் பணமுள் ளவனே.
ஏர்மட் டுமுறில் எளியவன் அலவோ ?
பல்வகைப் பண்பும் பணத்தை நாடிடுமே.

यस्यास्ति वित्तं स नरः कुलीनः
स पण्डितस्स श्रुतवान् गुणज्ञः ।
स एव वक्ता स च दर्शनीयः
सर्वे गुणाः काञ्चनमाश्रयन्ति ॥ ३३ ॥

34 பன்னிரு விதங்களில் கேடுறும் புவியில்;
கசடுறு மமைச்சால் கெடுவன் வேந்தன்;

அசடுகள் சேர்க்கையால் அழிவன் துறவி;
செல்லங் கொடுத்தால் சீர்கெடும் சந்ததி;
நல்லநூற் பயிற்சிக் குறைவால் மறையவன்
கெட்ட சந்ததியால் கேடுறும் தலைமுறை;
கெட்டவர்க் குழைந்தால் கேடுறும் நடத்தை;
நாணமும் ஒழுக்கமும் நறுங்குடி யாற்கெடும்;
காணுறுங் கவலை குறைவுறிற் க்ருஷிகெடும்;
தூரதேசஞ் செலிற் றெலைந்திடு மன்பு;
நல்லுணர் வற்றால் நட்புக் குறைவுறும்;
நடுநோக் கற்றிடில் நலிந்திடும் வாழ்வு.

दौर्मन्त्र्यान्नृपतिर्विनश्यति यतिस्सङ्गात्सुतो लालना-
द्विप्रोऽनध्ययनात्कुलं कुतनयाच्छीलं खलोपासनात् ।
ह्रीर्मद्यादनवेक्षणादपि कृषिः स्नेहः प्रवासाश्रया-
न्मैत्री चाप्रणयात्समृद्धिरनयात्त्यागात्प्रमादाद्धनम् ॥

35 செல்வஞ் செலற்கு மூன்றே வழியுள
நல்வழி யளித்தல் நுகர லளித்தலே;
கொடையும் நுகர்வும் கைகூ டாவிடில்
அடுதலாங் கடைவழி யதையே யடையும்.

दानं भोगो नाशस्तिस्रो गतयो भवन्ति वित्तस्य ।
यो न ददाति न भुङ्क्ते तस्य तृतीया गतिर्भवति ॥

36 கட்டளைக் கல்லில் தேய்த்தா மரதனம்,
முட்டிய முரணி லூறுபெறு வெற்றியன்,
மும்மதம் பொழிதலால் முரண்குறை யானை,
அம்பொழி லிலையுறு அழகிய காலம்
அம்பு வடிந்துறும் அறல்படி யாறுகள்,
எண்ணிரண் டவைகளில் ஒருபிறைத் தேய்பிறை,
பண்புறு மிளம்பெண் பதிசேர்ந் திளைத்தமை,
எளியவர்க் களித்தலால் அளிதரும் ஏழமை
ஒளியுறும் இளைப்புகள் இவைபல அழகே.

मणिश्शाणोल्लीढः समरविजयी हेतिदलितो
मदक्षीणो नागः शरदि सरिदाश्यानपुलिना ।

कलाशेषश्चन्द्रः सुरतमृदिता बालवनिता
तनिम्ना शोभन्ते गलितविभवाश्चार्थिषु नृपाः ॥ ३६ ॥

37 மிக்க பசியால் வருந்திடும் மிடியன்
தக்கதோர் கைபிடித் தானியம் விரும்புவன்
அந்த வறிஞனே அளவிலாப் பொருள்பெறில்
இந்தப் புவியையு மிகழ்வன் புல்லென;
ஆகவே பொருட்பால் அற்பும் வெறுப்பும்
ஆகும் நிலைமைக் கேற்கவே மாறிடும்;
செல்வரின் பதவி சிறப்பதற் கேற்ப
அல்கும் அகலும் பொருட்பால் மதிப்பே.

परिक्षीणः कश्चित् स्पृहयति यवानां प्रसृतये
स पश्चात्संपूर्णः कलयति धरित्रीं तृणसमाम् ।
अतश्चानेकान्ता गुरुलघुतयार्थेषु धनिना-
मवस्था वस्तूनि प्रथयति च संकोचयति च ॥

38 மன்னு முறைகேள் நிலப்பசுப் பால்பெற
கன்றுப் போற்றல்போல் காத்திடிவ் வவனியை;
ஓயா விழிப்புடன் உலகினைப் புரந்தால்
ஓவாப் பயன்தரு முயர்ந்தகற் பகமென.

राजन् दुधुक्षसि यदि क्षितिधेनुमेतां
तेनाद्य वत्समिव लोकममुं पुषाण ।
तस्मिंश्च सम्यगनिशं परिपुष्यमाणे
नानाफलं फलति कल्पलतेव भूमिः ॥ ३८ ॥

39 அரசவைத் தந்திர மதிசய வெதிரிடை
விரவுறும் விலைமகள் போலத் திரிவுறும்
உண்மை பொய்மை கடுமை மென்மை
கொடுமை கருணை கடுஞ்செட் டுதாரம்
ஓயாச் செலவு ஓயா வரும்படி.

सत्याऽनृता च परुषा प्रियभाषिणी च
हिंस्रा दयालुरपि चार्थपरा वदान्या ।

नित्यव्यया प्रचुरनित्यधनागमा च
वाराङ्गनेव नृपनीतिरनेकरीतिः ।। ३९ ।।

40 பின்வரு மறுபயன் போற்று தார்க்கு
மன்னரை மன்னி யுறுவதென் மகிழ்வு ?
சொன்னசொல் நிறைவுறல் மன்னு மிசைபெறல்
உன்னுமொண் மறையவர்க் குறுபொரு ளுதவுதல்
தன்னிடஞ் சார்ந்தவர்க் காத்துமிக் களிதரல்
இன்பம் நுகர்ந்திடல் நண்பரைப் புரத்தலே.

आज्ञा कीर्तिः पालनं ब्राह्मणानां दानं भोगो मित्रसंरक्षणं च ।
येषामेते षड्गुणा न प्रवृत्ताः कोऽर्थस्तेषां पार्थिवोपाश्रयेण ।।

41 கிணற்றினிற் கொண்டிடு மவ்வள வேநீர்
கடற்றிரை தனிலுங் கொண்டிடுங் குடமே;
படைத்தவன் தலையில் பொறித்த நஞ்செல்வம்
கிடைத்திடல் திண்ணம் கொஞ்சமோ வதிகமோ
கிடைப்பது கிடைக்கும் களர்மணற் பரப்பிலும்;
இடைப்பிற மேருவின் உயர்முக டேறினும்
படைப்பவன் விதிக்குமேல் பலிப்பதே இல்லையே.

यद्धात्रा निजफालपट्टलिखितं स्तोकं महद्वा धनं
तत्प्राप्नोति मरुस्थलेऽपि नितरां मेरौ च नातोऽधिकम् ।
तद्धीरो भव वित्तवत्सु कृपणां वृत्तिं वृथा मा कृथाः
कूपे पश्य पयोनिधावपि घटो गृह्णाति तुल्यं जलम् ।।

ஐந்தாம் பத்து

துர்ச்சன பத்ததி.

42 இரக்க மிலாமை இனமிலாச் சண்டை
பிறன்பொருள் மனைவியைப் பேதையாய் வெஃகல்
அன்புள வுறவிடம் அழுக்கா றுறுதல்
புன்புரைக் கயவர்க் கியற்கை யிவ்வைந்தும்.

अकरुणत्वमकारणविग्रहः परधने परयोषिति च स्पृहा ।
सुजनबन्धुजनेष्वसहिष्णुता प्रकृतिसिद्धमिदं हि दुरात्मनाम् ॥

43 ஒளிக்கல் புனையினு மொழித்திடு நச்சரா;
கல்வி சேர்ந்திடினும் கழிந்திடு கயவனை.

दुर्जनः परिहर्तव्यो विद्ययालङ्कृतोऽपि सन् ।
मणिना भूषितः सर्पः किमसौ न भयङ्करः ॥ ४३ ॥

44 எவ்வித உயர்வை யவ்விய நிகழார்?
வணக்க முள்ளமையை வெள்ளறி வென்பர்;
நோன்பு தூய்மைகள் வெளிப்பகட் டென்பர்;
மாசிலா வொழுக்கை மோசடி யென்பர்;
தறுக ணாண்மை தண்ணளிக் குறைவாம்;
அறம்பியல் துறவியை அறிவில னென்பர்;
மென்மையா மின்மொழி கையுறை யாகும்.
ஒள்ளிய தன்மையைச் செருக்கென உரைப்பர்.
நாவலர் தம்மைப் பேச்சுவா யென்பர்;
எவ்வித உயர்வையு மவ்விய நிகழ்வரே.

जाड्यं ह्रीमति गण्यते व्रतशुचौ दंभः शुचौ कैतवं
शूरे निर्घृणता मुनौ विमतिता दैन्यं प्रियालापिनि ।
तेजस्विन्यवलिप्तता मुखरता वक्तव्यशक्तिस्थिरे
तत्को नाम गुणो भवेत्स गुणिनां यो दुर्जनैर्नाङ्कितः ॥

45 சினமு ளதென்னில் செந்தீ எதற்கு?
இனம்பார்த் திடாமையின் இழிசெயல் ஏது?
உண்மை யுளதெனில் தவம்வே றெதற்கு?
நன்மை யிதனிலும் நாம்கா ணலமே;
உளத்தூய் மையுண் டெனில் குளம்நதி எதற்கு?
அளவளாய் நயத்தலில் அருந்திற லேது?
நல்லிசை தன்னிலும் நயந்தரு மணியெது?
நல்வினக் கல்வியின் நலந்தரும் பொருளெது?
பொல்லா னெனப்பெயர் புனைதலின் விளிவெது?
நல்லானெ னப்பெயர் புனைதலே நல்லுயிர்.

लोभश्चेदगुणेन किं पिशुनता यद्यस्ति किं पातकैः
सत्यं चेत्तपसा च किं शुचि मनो यद्यस्ति तीर्थेन किम् ? ।
सौजन्यं यदि किं बलेन महिमा यद्यस्ति किं मण्डनैः
सद्विद्या यदि किं धनैरपयशो यद्यस्ति किं मृत्युना ॥ ४५ ॥

46 என்னுளம் ஊறுசெய் அயில்வேல் ஏழுள;
மன்னொளி நீங்கப் பகற்ருேன் றிடும் மதி;
தன்னிள நலங்கழிந்த தன்பினும் காதலாள்;
நன்னிறத் தாமரை நீங்கிய பொய்கை;
அறிவெழுத் தில்லான் அந்தமார் வதனம்;
செறிபொரு ளாளன் சேர்பொரு ளிவறல்;
ஓவா வறுமை யாலுழலு முத்தமர்கள்;
கோவா ரரண்மனைக் கொடியவர் புகலே.

शशी दिवसधूसरो गलितयौवना कामिनी
सरो विगतवारिजं मुखमनक्षरं स्वाकृतेः ।
प्रभुर्धनपरायणः सततदुर्गतिस्सज्जनो
नृपाङ्गणगतः खलो मनसि सप्त शल्यानि मे ॥ ४६ ॥

47 சவிமிகுஞ் செந்தீ சோர்வுடன் தீண்டிடில்
அவிசொரி யந்தணர் கரத்தையுஞ் சுடுமே;
காய்சின வேந்தன் கதமிகு போழ்தினில்
ஆய்பொரு ளமைச்சரும் அகல்க சற்றமைவுற.

न कश्चिच्चण्डकोपानामात्मीयो नाम भूभुजाम् ।
होतारमपि जुह्वानं स्पृष्टो दहति पावकः ॥ ४७ ॥

48 மெத்த கடினம் மிக்கவர் பணிசெயல்;
மிக்கவர் தமக்குப் பணிவிடை எளிதல்;
வாய்திற வாவிடில் மூகைய னென்பர்;
வாய்வல ருகில் வாயாடி யென்பர்;
அணுகிப் பழகி லகந்தைய னென்பர்;
அணுகா தகலின் அச்சமிக் குடையனும்;
பொறுமையுள் ளானெனில் பயங்கொளி யென்பர்;
பொறுமையில் லானெனில் பிறப்பிலே யிகழ்வர்.

मौनान्मूकः प्रवचनपटुर्वाचको जल्पको वा
धृष्टः पार्श्वे भवति च वसन् दूरतोऽप्यप्रगल्भः ।
क्षान्त्या भीरुर्यदि न सहते प्रायशो नाभिजातः
सेवाधर्मः परमगहनो योगिनामप्यगम्यः ॥ ४८ ॥

49 கீழ்மகன் பழக்கம் கூட்டுமே துயரை;
கீழ்மக் களுக்கே கிழமை ஈவன்;
நீதித் தளைகளை நீங்குறத் தெறிப்பன்;
தீதாம் பதவித் தீச்செயல் மறந்தவன்;
கணக்கிலாச் செல்வம் கணந்தரச் சேர்ந்தவன்;
பிணக்குடன் நற்குணம் பலவும் பகைப்பவன்.

उद्भासिताखिलखलस्य विशृङ्खलस्य
प्रोद्गाढविस्मृतनिजाधमकर्मवृत्तेः ।
दैवादवाप्तविभवस्य गुणद्विषोऽस्य
नीचस्य गोचरगतैः सुखमास्यते कैः ॥ ४९ ॥

50 புல்லார் நட்பு முற்பகல் நிழலே;
நல்லோர் நட்பு பிற்பகல் நிழலே;
நீண்டுபின் குறுகும் நிலையிலார் நட்பு;
பூண்டுசிற் றுருவம் பெருகு நன்னட்பே.

आरंभगुर्वी क्षयिणी क्रमेण लघ्वी पुरा वृद्धिमुपैति पश्चात् ।
दिनस्य पूर्वार्धपरार्धभिन्ना छायेव मैत्री खलसज्जनानाम् ॥ ५० ॥

51 புல்லுண் மானைப் பகைப்பன் வேடன்;
தண்ணுண் மீனைத் திருகுவன் வலையன்;
தன்னுள் ளமைதியுண் தவசியைக் கோட்சொலி;
எண்ணுள் மூவரும் இகல்கொளல் எவனோ?

मृगमीनसज्जनानां तृणजलसंतोषविहितवृत्तीनाम् ।
लुब्धकधीवरपिशुना निष्कारणमेव वैरिणो जगति ॥ ५१ ॥

ஆறாம் பத்து

ஸுஜன பத்ததி.

52 இந்தநற் றன்மையர்க் காக்குவேன் பணிவை;
நைந்து நெஞ்சுருகி நல்லினம் பழகுவோர்,
மற்றவர் நன்மையில் மகிழ்வுறும் நல்லோர்,
உற்றமூப் பாளருக் குரியதொண் டியற்றுவோர்,
ஆவலாய்க் கல்வியை யகமுறப் பயில்வோர்,
காதலாய்த் தன்மனை யாளையே கருதுவோர்,
நல்லோர் வசைதமை நணுகுரு தஞ்சுவோர்,
வல்லோ ஞமரன் வன்சரண் புகுவோர்
தம்புலன் பொறிகளைத் தகைபெற அடக்குவோர்,
வன்கணர் இனத்தை வகைபெறத் துறந்தோர்.

वाञ्छा सज्जनसंगतौ परगुणे प्रीतिर्गुरौ नम्रता
विद्यायां व्यसनं स्वयोषिति रतिर्लोकापवादाद्भयम् ।
भक्तिश्शूलिनि शक्तिरात्मदमने संसर्गमुक्तिः खलै-
रेते येषु वसन्ति निर्मलगुणास्तेभ्यो नमः कुर्महे ॥ ५२ ॥

53 சான்றோர்க் கியற்கையாம் சால்புகள் கேண்மோ,
தோன்றிய துயரால் திறல்தள ராமை,
ஆன்றநல் வாழ்வினில் அரும்புரை பொறுத்தல்,
ஆன்றோ ரவையில் அழகிய சொற்றிறம்,
நேர்ந்திடும் போர்களில் நிலைதள ராமை,
தேர்ந்துநல் லிசையினைத் திகழ்வுறச் சேர்த்தல்,
ஓர்ந்துணர் மறைகளை யுவந்தே பயில்தல்
நேர்மையா மாறும் நிலைபெறல் நன்றே.

विपदि धैर्यमथाभ्युदये क्षमा सदसि वाक्पटुता युधि विक्रमः ।
यशसि चाभिरतिर्व्यसनं श्रुतौ प्रकृतिसिद्धमिदं हि महात्मनाम् ॥

54 இயற்கையிற் பெரியராய் இருப்பவர் தமக்கு
பெயத்தகும் பணங்கா சில்லையென் றுலும்
உடலின் கூரும் உறுப்புகள் தம்மில்
இடப்பட் டழகுசெய் யணிகள் இவையுள:
புகழத் தகுகொடை பொருந்துறுங் கரத்தில்;

திகழுங் குருவடிக் கன்புறுந் தலையில்;
மெய்மையாம் பேச்சுறும் மென்மைசால் முகத்தில்;
மொய்ம்படர்ப் புயங்களில் மிகுந்துள வெற்றி;
கள்ளம் கவடிலா நெஞ்சகம் தன்னில்
ஒள்ளி தாகிய தூய்மை உறைந்திடும்;
கல்விகேள் விகளால் கனமுறுங் காதில்
செல்வமார் வேதச் சுருதிகள் சொரிவன.

करे श्लाघ्यस्त्यागः शिरसि गुरुपादप्रणयिता
मुखे सत्या वाणी विजयि भुजयोर्वीर्यमतुलम् ।
हृदि स्वच्छा वृत्तिः श्रुतमधिगतं च श्रवणयोः
विनाप्यैश्वर्येण प्रकृतिमहतां मण्डनमिदम् ॥ ५४ ॥

55 நல்லிசை தரும்வழி நவில்வேன் பத்துள:
உயிர்க்கொலை நீத்தல் ஊர்ப்பொரு ளிகத்தல்,
உள்ளதை யேசொலல் உற்றபோ தளித்தல்,
அயற்பெண்டிர்ப் பேச்சறல், ஆசைவெள் ளந்தெறல்,
பெரியோர்க் கிணங்கல், பல்லுயிர்க் கிரங்கல்,
பலநூல் மதித்தல், கடமை கடைப்பிடி.

प्राणाघातान्निवृत्तिः परधनहरणे संयमः सत्यवाक्यं
काले शक्त्या प्रदानं युवतिजनकथामूकभावः परेषाम् ।
तृष्णास्रोतोविभङ्गो गुरुषु च विनयः सर्वभूतानुकंपा
सामान्यं सर्वशास्त्रेष्वनुपहतविधिः श्रेयसामेव पन्थाः ॥ ५५ ॥

56 தீரர்தம் நெஞ்சம் திரிவுறும் முறைகேள்;
வாழ்வுறும் போது வளமா ராம்பல்போல்
தாழ்வுரு திரங்கும் தருபஞ் செயற்கு;
தாழ்வுறும் போது தன்சுகம் மறுத்து
மாழ்குருக் கருங்கல் மானும் துயர்வதில்.

संपत्सु महतां चित्तं भवेदुत्पलकोमलम् ।
आपत्सु च महाशैलं शिलासङ्घातकर्कशम् ॥ ५६ ॥

57 நீதி நெறிநேயம் நெறியிலா ததனை
ஓது யிர்தந்தும் இகந்திடுந் தன்மை

கெட்டவர் தம்மிடம் செழுமெய் யுதவியும்
பெட்டவர் தம்மைப் பரவா திருத்தல்
நட்டவ ராயினும் நீங்கியர் பொருளெனின்
முட்டுற் றபோதும் முயன்று செஞ்சாமை
துயருற் றபோதும் துணிவாய் முயலல்
சான்றோர் பற்றிய சால்புறு நெறியை
தான்தவ றுமற் றுன்னி நடந்திடல்
இவ்வறு நுட்பமும் எளிதல் லிவற்றை
செவ்வியர் வாள்வாய்ச் சேர்நடை பழகல்போல்
எவ்விடம் உணர்வரோ யாமறி யோமே.

प्रिया न्याय्या वृत्तिर्मलिनमसुभङ्गेऽप्यसुकरं
त्वसन्तो नाभ्यर्थ्याः सुहृदपि न याच्यः कृशधनः ।
विपद्युच्चैर्धैर्यं पदमनुविधेयं च महतां
सतां केनोद्दिष्टं विषममसिधाराव्रतमिदम् ॥ ५७ ॥

58 புகலுறு தளித்தல் புகும்விருந் தெதிர்கொளல்
நகுங்கொடை நயந்தும் நாவ சையாமை
மற்றோர் நற்செயல் மகிமையால் விளம்பிடல்
உற்ற செல்வத்தில் உயர்வு பேசாமை
மற்றவர் தம்மை மருப்படா துரைத்தல்
இவ்வறு நுட்பமும் எளிதல இவற்றை
செவ்விய வாள்வாய்ச் சேர்நடை பழகல்போல்
எவ்விடம் உணர்வரோ யாமறி யோமே.

प्रदानं प्रच्छन्नं गृहमुपगते संभ्रमविधिः
प्रियं कृत्वा मौनं सदसि कथनं चाऽप्युपकृतेः ।
अनुत्सेको लक्ष्म्यां निरभिभवसाराः परकथाः
सतां केनोद्दिष्टं विषममसिधाराव्रतमिदम् ॥ ५८ ॥

59 சிவப்பக் காய்ந்த சிறப்புள இரும்புபோல்
உவப்பதாம் நீர்த்துளி உற்றிடில் உறுஞ்சிடும்
துளியதன் பேரும் துன்னுவோர் கேட்பதில்,
இளிவுறு மீனர் இத்தன் மையரே,
அதேவித நீர்த்துளி யந்தா மரையுறில்,
சுவேத முத்தெனச் சுகமாய் ஜொலிக்கும்;

தாமரை நீங்கில் தரள மொழியும்,
ஆமித் தன்மையர் அடைவர் மத்திமநிலை,
ஆழ்கடற் சிப்பியில் அழகிய சுவாதியில்,
வீழ்ந்திடில் நீர்த்துளி விரும்புறும் முத்தாம்,
விழுந்த இடத்தில் வேறுற நிலைத்து,
எழுந்தோங் குவதே உத்தமர் இயல்பு.

संतप्तायसि संस्थितस्य पयसो नामापि न श्रूयते
मुक्ताकारतया तदेव नलिनीपत्रस्थितं दृश्यते ।
अन्तस्सागरशुक्तिमध्यपतितं तन्मौक्तिकं जायते
प्रायेणाधममध्यमोत्तमजुषामेवंविधा वृत्तयः ॥ ५९ ॥

60 தாய்தந் தையர்க்குத் தன்னன் னடையால்
ஆய்ந்த உத்தமனும் அவனே மகனும்,
எப்போ துந்தன் கணவ னினிப்புற
தப்பா நலம்நினை தருமியே மனைவி;
உயர்விலும் தாழ்விலும் உற்றவோர் தன்மையாய்
துயரணு காமற் றணைந்தவன் நண்பன்.

यः प्रीणयेत्सुचरितैः पितरं स पुत्रो
यद्भर्तुरेव हितमिच्छति तत्कलत्रम् ।
तन्मित्रमापदि सुखे च समक्रियं यत्
एतत् त्रयं जगति पुण्यकृतो लभन्ते ॥ ६० ॥

61 வியப்புறத் தகுந்த பெருந்தகை விரகரை;
நயந்தநன் மதிப்புடன் நல்லோர் புகழ்வர்;
வணங்குதல் கொண்டே வளம்பெற் றுயர்வர்;
இணங்குமற் றவரியல் புகழ்தலா லிசையுறும்;
மற்றவர் கருத்தை முற்றுறச் செயலால்;
உற்றதங் கருத்தையும் வெற்றியாய்ச் செய்வர்,
தீயோர் தமக்குந் தயையுட னிரங்குவர்;
வீயா நரகில் வீழ்வதை யுன்னி;
கொடும்வசை வாயரைப் பொறையாற் கடியும்;
நடுவுள நல்லரை வணங்கா ருளரோ?

नम्रत्वेनोन्नमन्तः परगुणकथनैः स्वान्गुणान्ख्यापयन्तः
स्वार्थान्संपादयन्तो विततपृथुतरारंभयत्नाः परार्थे ।
क्षान्त्यैवाक्षेपरूक्षाक्षरमुखरमुखान्दुर्जनान्दुःखयन्तः
सन्तस्साश्चर्यचर्या जगति बहुमताः कस्य नाभ्यर्चनीयाः ॥

62 பழச்சுமை மிகுந்திடில் படிந்திடும் மரமே;
மழைநீர் சுரந்திடில் மாகம் பரவும்;
நல்லோர் செல்வம் நயனுறப் பெருகில்;
அல்லோர் போல அகந்தை பெருரே;
மற்ருேர் தமக்கு மாண்புசெய் பெரியோர்க்
கிற்றே இயற்கை இனிதுசெய் வாரே.

भवन्ति नम्रास्तरवः फलोद्गमै-
र्नवाम्बुभिर्दूरविलम्बिनो घनाः ।
अनुद्धतास्सत्पुरुषास्समृद्धिभिः
स्वभाव एवैष परोपकारिणाम् ॥ ६२ ॥

63 இரக்கச் செயல்களால் இரங்கிடும் நல்லுடல்
மணப்பூச் சாலல மற்றவர்க் குதவியால்;
கல்விகேள் விகளால் கிளர்ந்திடுங் காது;
பல்விதக் காதணி பொலிவு செய்யாவே
பொன்வளை புனைதலால் புகழ்பெறு மோகை?
நன்கொடை தன்னுல் நலம்பெறும் கரமே.

श्रोत्रं श्रुतेनैव न कुण्डलेन दानेन पाणिर्न तु कङ्कणेन ।
विभाति कायः करुणापराणां परोपकारेण न चन्दनेन ॥

64 கஞ்சம் விரிக்கும் கதிரவன் வைகறை;
விஞ்சுப அல்லிகள் விரிவன மதியால்;
கொண்டல்கள் மழையைக் கொட்டுவ தாமாய்;
தொண்டர் பிறர்நலம் போற்றுவர் துணிந்தே.

पद्माकरं दिनकरो विकचं करोति
चन्द्रो विकासयति कैरवचक्रवालम् ।

नाभ्यर्थितो जलधरोऽपि जलं ददाति
सन्तः स्वयं परहिते विहिताभियोगाः ॥ ६४ ॥

65 தன்னலங் கருதாப் பிறர்நலம் புரப்போன்
நன்னிலப் பரப்பில் நல்லாண் மகனே;
தன்னலங் கேடுறுத் தந்திரஞ் செய்து
மன்னிப் பிறர்பணி முடிப்பவன் மத்திமன்;
தன்பணி முடிக்கப் பிறர்பணி கெடுப்பவன்
அன்னவனே இவண் மானுட வரக்கன்;
எக்கா ரணமும் இன்றிப் பிறர்பணி
தக்கா தழிப்பவன் யாரோ துணிந்திலேன்.

एते सत्पुरुषाः परार्थघटकास्स्वार्थान् परित्यज्य ये
सामान्यास्तु परार्थमुद्यमभृतः स्वार्थाविरोधेन ये ।
तेऽमी मानुषराक्षसाः परहितं स्वार्थाय निघ्नन्ति ये
ये तु घ्नन्ति निरर्थकं परहितं ते के न जानीमहे ॥

66 நண்பன் தன்மையை நல்லோர் நவிலல்கேள்;
பண்பிலாப் பழியைப் பற்று தகற்றுவன்;
நன்னெறி யிற்செல நவில்வ னுபாயம்;
மன்னும் மந்தணம் மறைவுறப் போற்றுவன்;
நம்மின் நற்செயல் நயனுறப் பரப்புவன்;
நமக்குறும் இடரில் நம்மைக் கைவிடான்.

पापान्निवारयति योजयते हिताय
गुह्यं निगूहति गुणान् प्रकटीकरोति ।
आपद्गतं च न जहाति ददाति काले
सन्मित्रलक्षणमिदं प्रवदन्ति सन्तः ॥ ६६ ॥

67 நல்லோர் நட்பின் இயல்புகேள் நவில்வேன்;
நன்னீர் பாலிவை நட்பிற் கலந்தன;
தன்னோடு கலந்த தூநீ ரதற்கு;
மன்னும் பால்தான் தன்னியல் பளித்தது;
நெருப்புறு பாலது நிலைகுலைந் தெழவே;

விருப்புறு நீரும் வீழ்ந்தது தீயினில்;
துன்புறு தோழனுக் குறுதுயர் கண்டு
இன்புறு பாலும் எழுந்தது தீயுற;
பின்னுநீர் நண்பன் புனைந்து கலப்புற
இன்னுயிர் திரும்பி அடைந்த தோரமைதி.

क्षीरेणात्मगतोदकाय हि गुणा दत्ताः पुरा तेऽखिलाः
क्षीरोत्तापमवेक्ष्य तेन पयसा स्वात्मा कृशानौ हुतः ।
गन्तुं पावकमुन्मनस्तदभवद्दृष्ट्वा तु मित्रापदं
युक्तं तेन जलेन शाम्यति सतां मैत्री पुनस्त्वीदृशी ॥ ६७ ॥

68 இங்ஙனே கேசவன் இன்துயி லமர்ந்துளன்;
இங்ஙனே அவன்பகைக் குழூஉவினர் உளரே;
இங்ஙனே அடைக்கலம் புக்கவாம் வரைநுனி;
இங்ஙனே ஊழிக் கொண்டல்கள் உளவே;
இங்ஙனே அமர்ந்தது வடவைப் பெருந்தீ;
தங்கும் பொருட்குழூஉக் களிவிலை திரைக்கீழ்
வித்தார மிக்கது விரிநீர்ப் பௌவம்;
எத்தகை வல்லமை யடைந்துள திங்ஙனே.

इतः स्वपिति केशवः कुलमितस्तदीयद्विषां
इतश्च शरणार्थिनां शिखरिणां गणाः शेरते ।
इतोऽपि वडवानलः सह समस्तसंवर्तकै-
रहो विततमूर्जितं भरसहं च सिन्धोर्वपुः ॥ ६८ ॥

69 வைத்த பாரம் தாங்கும் விழுப்பம்
எத்தகை யார்க்கும் எய்துமோ வெளிதில்?
அவனிப் பெருஞ்சுமை அமைப்பாய்த் தாங்க
தவறு தளித்தது தன்முது காமை;
வான்சோ தித்திரள் வகையாய்ச் சுழல
தான்மை யமாக வமைந்தனன் துருவன்;
இவ்விரு தொண்டர் எய்தினர் பெரும்புகழ்
உயர்விலும் தாழ்விலு முளபல பறவைகள்
செயவுள தென்னதொண் டவைகளின் சிறகால்?
அத்திப் பழத்தின் உள்ளுறும் கிருமிபோல்
இத்தரை தன்னில் இழிந்துமாய்ந் துறும்பல.

जातः कूर्मः स एकः पृथुभुवनभरायार्पितं येन पृष्ठं
श्लाघ्यं जन्म ध्रुवस्य भ्रमति नियमितं यत्र तेजस्वि चक्रम् ।
सञ्जातव्यर्थपक्षाः परहितकरणे नोपरिष्टान्न चाधो
ब्रह्माण्डोदुम्बरान्तर्मशकवदपरे जन्तवो जातनष्टाः ॥ ६९ ॥

70 நல்லோர் இயற்கைகள் நான்மூன் றனவே;
ஆசையை யறுத்தல்; அரும்பொறை ளெர்த்தல்;
உளச்செருக் கொருத்தல்; தீமைசெய் துடிப்பை
தீரத் தொலைத்தல்; உண்மை யுரைத்தலே;
நல்லோர் வழிபடல்; கற்றோர்க் குதவுதல்
கல்வி மான்களைத் தழுவி நடந்திடல்;
பிறர்புகழ் பெருக்கல், நல்லிசை காத்தல்;
துயருளோர்க் கிரங்கல்; துன்னுவாய் துரிசற.

तृष्णां छिन्धि भज क्षमां जहि मदं पापे रतिं मा कृथाः
सत्यं ब्रूह्यनुयाहि साधुपदवीं सेवस्व विद्वज्जनम् ।
मान्यान्मानय विद्विषोऽप्यनुनय प्रख्यापय प्रश्रयं
कीर्तिं पालय दुःखिते कुरु दयामेतत्सतां चेष्टितम् ॥ ७० ॥

71 உளஞ்சொல் உடலம் மூன்றும் நன்மையாம்
உயிர்மருந் ததனுல் நிறைந்தவராகி
உலகமூன் றுக்கும் ஒருதெருப் போல
அலகில் லுதவிகள் இயற்றிப் போற்றி
மற்றவர் மேங்குணம் அணுவே யாகிலும்
உற்றவை தம்மை மலைபோல் உயர்த்தும்
மெய்யுடை நெஞ்சம் மலரென விரியும்
நையுமன் புடையராம் நல்லோர் பலரே,

मनसि वचसि काये पुण्यपीयूषपूर्णा-
स्त्रिभुवनमुपकारश्रेणिभिः प्रीणयन्तः ।
परगुणपरमाणून् पर्वतीकृत्य नित्यं
निजहृदि विकसन्तः सन्ति सन्तः कियन्तः ॥ ७१ ॥

தைர்ய பத்ததி.

72 கடைந்தனர் கடலைக் கடவுளர் அமுதுற;
இடையிற் கிடைத்தன உயிரொளிக் கற்கள்;
அடைந்த அரதனம் கொண்டோய்வில்லை;
அடலுறு கொடிய கடல் நஞ் செழுந்தது;
திடமிழந் தஞ்சி விடவிலை முயற்சியை;
அமுதம் அகப்படும் அதுவரை முயன்றனர்
விழுமிய முயற்சியிற் றளர்விலர் விரகர்

रत्नैर्महाब्धेस्तुतुषुर्न देवा न भेजिरे भीमविषेण भीतिम् ।
सुधां विना न प्रययुर्विरामं न निश्चितार्थाद्विरमन्ति धीराः ॥ ७२ ॥

73 அதமர் மத்திமர் உத்தமர் இயல்கேள்;
அதமர் முயலார் இடர்தனைக் சஞ்சி;
இடருற் றபோதே ஓய்வர் மத்திமர்;
இடர்பல உறினும் உத்தமர் ஓயார்.

प्रारभ्यते न खलु विघ्नभयेन नीचैः
प्रारभ्य विघ्ननिहता विरमन्ति मध्याः ।
विघ्नैर्मुहुर्मुहुरपि प्रतिहन्यमानाः
प्रारब्धमुत्तमगुणा न परित्यजन्ति ॥ ७३ ॥

74 கொண்ட முயற்சியிற் கருத்துறு மறிஞர்
அண்டுமின் பத்தையும் துன்பையு மதியார்
தளர்ந்து சில்போழ்து தரைமேல் துயில்வர்;
கிளர்ந்து சில்வேளை கட்டிலி லுறங்குவர்;
பச்சைக் கறிகாய் புசிப்பர் பல்சமயம்;
இச்சையாஞ் சோற்றையும் உண்பர் சில்போழ்து;
பன்னும் கந்தைகள் புனைவர் பல்நேரம்;
பொன்னு லாடையும் புனைவர் வாய்த்திடிலே.

क्वचित्पृथ्वीशय्यः क्वचिदपि च पर्यङ्कशयनः
क्वचिच्छाकाहारः क्वचिदपि च शाल्योदनरुचिः ।
क्वचित्कन्थाधारी क्वचिदपि च दिव्याम्बरधरो
मनस्वी कार्यार्थी न गणयति दुःखं न च सुखम् ॥ ७४ ॥

75 நீதிநெறி நூலார் புகழினு மிகழினும்
மீதுறும் சம்பவம் மிகுக்கினும் தாழ்க்கினும்
உடனே சாகினும் உறும்யுகம் உய்யினும்
அடலுறு முளத்தவர் அகலார் நல்வழி.

निन्दन्तु नीतिनिपुणा यदि वा स्तुवन्तु
लक्ष्मीः समाविशतु गच्छतु वा यथेष्टम् ।
अद्यैव वा मरणमस्तु युगान्तरे वा
न्याय्यात्पथः प्रविचलन्ति पदं न धीराः ॥ ७५ ॥

76 அழகியர் கட்கணைப் போழ்விலா வகத்தன்;
கொழுவிய சினத்தீ கொளுந்துரு நெஞ்சன்;
ஆவல் புலன்பொறித் தூண்டலுக் கிணங்கான்;
மூவுல குய்வெலும் முரணவன் அவனே.

कान्ताकटाक्षविशिखा न लुनन्ति यस्य
चित्तं न निर्दहति कोपकृशानुतापः ।
कर्षन्ति भूरिविषयाश्च न लोभपाशै-
र्लोकत्रयं जयति कृत्स्नमिदं स धीरः ॥ ७६ ॥

77 திண்ணிய நெஞ்சர் துயர்மிகப் பெறினும்
திண்மை யதறுமோ? திகழும் மேன்மேல்
பந்தம் தன்னைக் கீழுறப் பிடிக்கினும்
அந்தமாய் மேலுறும் அத்தீச் சுடரே.

कदर्थितस्यापि हि धैर्यवृत्तेर्न शक्यते धैर्यगुणः प्रमार्ष्टुम् ।
अधोमुखस्यापि कृतस्य वह्नेर्नाधः शिखा यान्ति कदाचिदेव ॥ ७७ ॥

78 நன்னெறி விலகி நலமிழப் பதிலும்
உன்னத வரைபாய்ந் தொழிவுறல் நன்றே
கூரெயிற் றரசராக் கொடியவாய் தனிலே
நேறினிற் கையை நுழைத்திடல் நலமே;
நெறிவிட் டிழிதலின் எரியுறல் நேரென
செறிபுகழ்ச் சீரியர் சாற்றினர் சிறக்க.

वरं भृङ्गोत्सङ्गाद्गुरुशिखरिणः क्वापि विषमे
पतित्वायं कायः कठिनदृषदन्ते विदलितः ।
वरं न्यस्तो हस्तः फणिपतिमुखे तीक्ष्णदशने
वरं वह्नौ पातस्तदपि न कृतः शीलविलयः ॥ ७८ ॥

79 எல்லோ ருளங்களுங் கவர்ந்திடுந் தூய்மையோர்
சில்லெனும் நீராய் நெருப்பையுஞ் செய்வர்;
கடலையுஞ் சிறியதாம் காலக மாக்குவர்;
வடமலை மேருவும் இடந்தரு பாறையாம்;
விலங்க ரசாகிய வீரகே சரியும்
உளங்கொள் மாத்திரத்தில் உறுநல மானும்;
கிளர்ந்திடுங் கோளரா குளிர்ந்ததோர் மலையாம்;
நஞ்சு மமிர்தமாம்; நல்லோர் திறல்பால்.

वह्निस्तस्य जलायते जलनिधिः कुल्यायते तत्क्षणा-
न्मेरुः स्वल्पशिलायते मृगपतिः सद्यः कुरङ्गायते ।
व्यालो माल्यगुणायते विषरसः पीयूषवर्षायते
यस्याङ्गेऽखिललोकवल्लभतरं शीलं समुन्मीलति ॥ ७९ ॥

80 வெட்டிக் கழிக்கினும் வளர்ந்திடும் மரமே;
ஒட்டி வளர்ந்திடும் கட்டதாம் பிறையே;
இத்தகைக் காட்சியை உற்றுநோக் கறிஞர்
இத்தரைப் பொருட்டே வடைந்திலர் துயரே.

छिन्नोऽपि रोहति तरुः क्षीणोऽप्युपचीयते पुनश्चन्द्रः ।
इति विमृशन्तस्सन्तः सन्तप्यन्ते न लोकेषु ॥ ८० ॥

81 அன்புடன் பழகுதல் இறைமைக் கணியாம்;
வன்கணாண் மைக்கணி வணங்கிய சொல்லே;
பேரறி வாண்மைக் கணியது பொறையே;
சேரரு மறைக்கணி செருக்கற் றிருத்தல்;
செல்வத் திற்கணி சிறப்பறிந் தீதல்;
மல்கருள் தவத்திற் கணியது மகிழ்வே;
தலைமைக் கணியது தண்பொறை யுடைமை;
நிலையறத் திற்கணி நினைபய னின்மை;

என்னேக் குடையரும் எவ்வினத் தவரும்
தன்னுளங் கொளுமணி தகைமைசால் தூய்மையே.

ऐश्वर्यस्य विभूषणं सुजनता शौर्यस्य वाक्संयमो
ज्ञानस्योपशमः श्रुतस्य विनयो वित्तस्य पात्रे व्ययः ।
आक्रोधस्तपसः क्षमा प्रभवितुर्धर्मस्य निर्व्याजता
सर्वेषामपि सर्वकारणमिदं शीलं परं भूषणम् ॥ ८१ ॥

தைவபத்ததி

82 வலனைத் தொலைத்தவன் வலியனும் இந்திரன்;
நலனைச் சொலற்கு நேர்ந்தவன் பிருகஸ்பதி;
வச்சிரா யுதமே வாய்ந்த படைக்கலம்;
உச்சித மான உம்பரே படைத்திறள்;
சுவர்க்கமே யவன்தன் சிறப்புறு கோட்டை;
எவர்க்கு முயர்ந்தவன் விட்டுணு வாழ்த்தினன்.
அவனின் நற்கரி ஐரா வதமே;
பவனி வருங்கால் பாங்கா யமைந்தது,
மதிக்கத் தக்கவை மாண்புறு சேர்க்கை
அதிசய மான வலிமை யமைந்தவன்;
விதிவலி மிகுதியால் எதுவுங் காப்பிலை.
இத்தனை யுயர்வுள ளுகிய இறைவனும்
இற்றனன் போரில் இசைகெடப் பகைவரால்
ஆதலால் நாமும் அறிவது யாதெனில்
பேதையாய்ப் பெருமையைச் சொலிக்கொளல் தவறே.

नेता यस्य बृहस्पतिः प्रहरणं वज्रं सुराः सैनिकाः
स्वर्गो दुर्गमनुग्रहः खलु हरेरैरावणो वारणः ।
इत्याश्चर्यबलान्वितोपि बलभिद्भग्नः परैः सङ्गरे
तद्व्यक्तं ननु दैवमेव शरणं धिग् धिग् वृथा पौरुषम् ॥ ८२ ॥

83 முடங்கிய பாம்புள மூங்கிற் பெட்டியை
மடங்கொளும் எலியொன்றறுத்துளே முகர்ந்தது;
துயில்கலைந் தெழுந்தது துட்டப் பாம்பு;
அயில்நிகர் பற்களால் அலைத்ததை யுண்டது;
உண்டபின் னரவம் உற்ற வத்துளையால்

கண்டு வெளிப்புறங் கழன்றோ டியதே.
ஆதலால் நண்ப அகற்றிடுன் கவலை
போதுறும் துயர்க்கும் பெற்றிடுங் களிக்கும்
ஓதுறும் விதியே உற்ற காரணமாம்.

भग्नाशस्य करण्डपिण्डिततनोर्म्लानेन्द्रियस्य क्षुधा
कृत्वाखुर्विवरं स्वयं निपतितो नक्तं मुखे भोगिनः ।
तृप्तस्तत्पिशितेन सत्वरमसौ तेनैव यातः पथा
स्वस्थास्तिष्ठत दैवमेव हि परं वृद्धौ क्षये कारणम् ॥ ८३ ॥

84 பெரியோர் வீழினும் பந்தென வீழ்வர்
சிறியார் சிறுமையாம் மண்ணுண்டை வீழ்ச்சிபோல்;
பந்து வீழ்ந்திடில் பறந்து மேற்கிளம்பும்;
உந்தி மேலெழுமோ உறுமண் ணுண்டை?

यथा कन्दुकपातेनोत्पतत्यार्यः पतन्नपि ।
तथा त्वनार्यः पतति मृत्पिण्डपतनं यथा ॥ ८४ ॥

85 வெயில்பொறுக் காதவோர் வழுக்கைத் தலையன்
நிழல்பெற விரும்பி நின்றனன் பனைக்கீழ்;
பருத்தவோர் பனங்காய் பட்டென வீழ்ந்து
இரத்தந் தோன்ற உடைத்தது மண்டையை;
விதிவசத் தாலே நெருங்குறும் வறியனை
மதிக்கவலைப்புண் மதிக்குமே மேன்மேல்.

खल्वाटो दिवसेश्वरस्य किरणैः संतापिते मस्तके
गच्छन्देशमनातपं विधिवशात्तालस्य मूलं गतः ।
तत्राप्यस्य महाफलेन पतता भग्नं सशब्दं शिरः
प्रायो गच्छति यत्र दैवहतकस्तत्रैव यान्त्यापदः ॥ ८५ ॥

86 தலைவிதி யதற்கே தலைமையாம் வலிமை
அலைகட லுலகில் அதற்குமேல் ஏது
கந்தடு கரியும் கொடிய நச்சரவும்
வந்தகப் படுமே வானுறு பறவைபோல்;

கதிர்மதி ஞாயிறும் கோள்களால் பற்றுறும்
எதிர்வுறும் பொறியால் அறிஞரும் வறிஞரே.

गजभुजङ्गविहङ्गमबन्धनं शशिदिवाकरयोर्ग्रहपीडनम् ।
मतिमतां च विलोक्य दरिद्रतां विधिरहो बलवानिति मे मतिः ॥

87 குறைவில் லாத குணம்நிறை கடலாய்
உறைவி டமான உலகினுக் கணியாம்
அரதனம் நிகர்த்த ஆண்மகன் தன்னை
இரத மான இனியனை இயற்றியான்
அவனையும் நொடியினில் அக்கினி சேர்த்திடில்
இவனையு மந்தோ இருந்தை யென்போமே.

सृजति तावदशेषगुणाकरं पुरुषरत्नमलंकरणं भुवः ।
तदपि तत्क्षणभङ्गि करोति चेदहह कष्टमपण्डितता विधेः ॥ ८७ ॥

88 விதியின் பயனை விலக்குதல் எவர்க்காம்
நிதியாம் அமுதம் நிறைந்துள தவன்கண்.
சஞ்சீ வினிபோல் சிறந்தவோ டதிக்கிறை;
அஞ்சிரு பதின்மராம் மருத்துவ ரவனிடம்;
சம்புவாம் பரமன் சடைமுடி வதிபவன்;
அம்புவி இறைவர்க் குறுபிணி கயமது
இம்மதிப் பெரியனை இகவா தாகும்.

अयममृतनिधानं नायकोऽप्योषधीनां
शतभिषगनुयातः शम्भुमूर्ध्नोऽवतंसः ।
विरहयति न चैनं राजयक्ष्मा शशाङ्कं
हतविधिपरिपाकः केन वा लङ्घनीयः ॥ ८८ ॥

89 நண்பகேள் நவில்வதை கலனும் பிரமன்
திண்ணிய குயவன் மண்திரட் டுதல்போல்
உருட்டி உருவாக்குவன் உளமாம் பொருளை
புரட்டிப் பெருந்துயர் என்னுந் தடியால்
ஓயா தொழியா துறுதியா யடிப்பன்;
ஓவாத் தொடுகையால் உலர்ந்ததை மறுபடி
கவலையாம் சக்கர மீதினில் சுழற்றுவன்;

கவலை யிறைப்பிற் சுழலல்போல் கலங்குறும்.
இவ்வகை விஷமம் இயற்றலால் பிரமன்
எவ்வகைப் பயனுறும் உணரோம் யாமே.

प्रियसख विपद्दण्डाघातप्रपातपरंपरा-
परिचयबले चिन्ताचक्रे निधाय विधिः खलः ।
मृदमिव बलात्पिण्डीकृत्य प्रगल्भकुलालव-
द्भ्रमयति मनो नो जानीमः किमत्र विधास्यति ॥ ८९ ॥

90 முட்டாள் விதியே! முயலா தேநீ!
முட்டுற்ற போது முரணவர் முரணற!
பெருமலைக் கூட்டமோ பெருங்கடற் றெகுதியோ
உறுந்தம் வலிமை உகுந்திடும் முடிவிலும்
அறுமோ அவைதம் அழகிய பெருமை
உறுமோ தீரர் உரமும் இறுதியை
கற்பாந் தத்திலும் கரையா தவர்திறல்
விற்பனர் மேன்மை அற்றிடல் இலையே.

विरम विरमायासादस्माद्दुरध्यवसायतो
विपदि महतां धैर्यध्वंसं यदीक्षितुमीहसे ।
अयि जडविधे कल्पापायेऽप्यपेतनिजक्रमाः
कुलशिखरिणः क्षुद्रा नैते न वा जलराशयः ॥ ९० ॥

91 மன்னுல கத்திற் பிறந்தமா னிடற்கு
கண்ணும் பிரமன் கதித்ததே கையுறும்;
வல்லவர் சேர்க்கையால் மேன்மேல் வருதல்
ஒல்லுஞ் செயலல உற்றுநோக் கிடிலே.
எல்லா விருப்பும் நிறைவுற எழிலிகள்
செல்லார் வானின் சொரிபொழு தெல்லாம்
விண்வீழ் துளிக்கு விரும்பி யலைபுள்
நண்ணும் நன்னீர் சிற்சில துளிகளே.

दैवेन प्रभुणा स्वयं जगति यद्यस्य प्रमाणीकृतं
तत्तस्योपनमेन्मनागपि महान्नैवाश्रयः कारणम् ।
सर्वाशापरिपूरके जलधरे वर्षत्यपि प्रत्यहं
सूक्ष्मा एव पतन्ति चातकमुखे द्वित्राः पयोबिन्दवः ॥ ९१ ॥

கர்மபத்ததி

92 கடவுளர் தமக்குநாம் கருதுவோம் வணக்கம்;
அடலுளார் அவரும் அமர்ந்தவர் விதிக்கீழ்;
தலைவிதிக் கும்நாம் தலைவணங் கல்முறை;
தலைவிதி தானும் தந்திடும் வினைப்பயன்
வினைப்பயன் கிடைப்பது வினையினு லேயெனின்
வினையன்றி மற்றவை யாலே பயனென் ?
விதியுங் கூட வினைக்கப் புறந்தான்.
விதிவினை நீக்கி வினைசெயல் இலையெனில்
வினைக்குத் தானே விழுப்பஞ் செய்வோம்
